உ

குகமயம்



# இணுவில் கந்தசுவாமி
# திருவிரட்டை மணிமாலை

ஆக்கம் : விழிசைச் சிவம்

1996

விலை : ரூபா 15 – 00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குகமயம்



# இணுவில் கந்தசுவாமி

# திருவிரட்டை மணிமாலை

ஆக்கம் : விழிசைச் சிவம்

அச்சுப்பதிப்பு :

அம்மா, இணுவில் - மருதனார்மடம்

1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குகமயம்

# முன்னுரை

தெல்லிப்பழையைச் சேர்ந்ததும், வித்தகபுரம் என்னும் கிராமசேவகர் பிரிவிலுள்ளதுமான விழிசிட்டிக் கிராமத்திற் பிறந்து வளர்ந்த அடியேன் இராணுவ நடவடிக்கைகள் காரண மாக 1990 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் தொடக்கமாகச் சொந்த இடத்தை விட்டு அளவெட்டிக்குப் போய்ச் சிறிது காலம் அங்கே தங்கியிருந்தேன். அங்கும் நிம்மதியாக இருக்க முடியாத நிலை ஏற்பட்டதால் 1992 ஆம் ஆண்டு ஆவணி மாதப் பிற் பகுதியில் அளவெட்டியில் இருந்து புறப்பட்டுக் கரவெட்டிக்குப் போய் அங்கே 5 மாத காலம் தங்கியிருந்தேன். எனது மகளும் குடும்பத்தினரும் உத்தியோக காரணமாக இணுவிலுக்கு வந்த மையால் யானும் 1993 ஆம் ஆண்டு மாசி மாதம் தொடக்க மாக இணுவிலுக்கு வந்து வசிக்கிறேன், இங்கே வந்தபின் வெள்ளிக்கிழமைகளிலே இங்குள்ள ஆலயங்களுக்குத் தரிசனத் துக்காகச் செல்வது வழக்கம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாகச் சொந்த இடங்களை விட்டு வெளி யேறிக் கஷ்டப்படுகிறவர்கள் அநேகர். எத்தனையோ கிராம மக்கள் சொந்த வீடு, காணி, தோட்டங்கள், தளபாடங்கள் முதலியவற்றையெல்லாம் கைவிட்டு வந்து அல்லற்படுவதைக் காண்கிறோம். தமிழர்களாகிய நாம் படுந்துன்பங்களை இங்கே வீற்றிருக்கும் தெய்வங்களிடம் முறைப்படுகின்ற தோரணையில் இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் மும்மணிக்கோவை, இணுவில் கந்தசுவாமி திருவிரட்டை மணிமாலை, இணுவில் சிவகாமியம்மை திருவிரட்டை மணிமாலை என்ற பிரபந்தங் களைத் திருவருட்டுணை கொண்டு பாடினேன். அவற்றுள் ஒன்றாகிய இணுவில் கந்தசுவாமி மீது பாடப்பட்ட திரு விரட்டை மணிமாலை இப்போது வெளிவருகிறது. அன்பர்கள், அறிஞர்கள் ஆதரிப்பார்களாக.

வணக்கம்.

ஆஸ்பத்திரியயல்,
இணுவில்.
01-06-96

செ. சிவசுப்பிரமணியம்
ஓய்வுபெற்ற அதிபர்
(விழிசைச் சிவம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குகமயம்

# இணுவில், கந்தசுவாமி
# திருவிரட்டை மணிமாலை

## காப்பு

### கட்டளைக் கலித்துறை

செகராச சேகரப் பேர்பெறு பிள்ளையே தேசமெலாம்
சுகமாக வாழ்ந்திடத் தூய இணுவிற் பதிதனில்வாழ்
குகனா மிறைவனின் மீதிலே யான்மணி மாலையினை
அகமே மகிழ்வுற ஆக்கிட உன்னடி காப்பதுவே.

## நூல்

1. வெண்பா

சீரிணுவை வாழ்முருகா சேயரெமைக் காத்தருள்வாய்
சேரிடமே தானறியா தோடுகிறோம் — ஓரிடமும்
இல்லையே நாங்கள் இடரொழிந்து வாழ்வதற்கு
ஒல்லையே ஓடிவா வா.

2. கட்டளைக் கலித்துறை

ஓடியே வாவென் றுளநொந்து வேண்டினோ முன்செவியில்
கூடவே இல்லையோ குற்றங்கள் யாம்பல செய்ததுண்டோ
தேடவுங் கூடாத் திருவடி காட்டி அடியவரைப்
பாடவும் பண்ணிப் பயன்பல செய்தனை பண்புடனே.

3. வெண்பா

பண்புடனே வந்திடுவாய் பாவியரைப் பார்த்தருள்வாய்
நண்புடனே காப்பதற்கு நாதரிலைத் — துன்பமெனும்
எல்லையிலாச் சாகரத்துள் எய்தியே மாளுகிறோம்
வல்லைதனில் வந்திடுவா யே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கட்டளைக் கலித்துறை

வந்திடு வாயென மாண்புடன் வேண்டி வணங்கிடுவோம்
புந்தியி லன்புடன் போற்றுவம் நின்னடி போதமிலா
மந்தைய ராகியே மாசுறு தீவினை செய்தமையால்
அந்தோ இவணா மடைந்திடு மின்னல் அளப்பரிதே.

5. வெண்பா

இன்னல்களோ எல்லையில ஈசனையும் தாம்நினையார்
முன்னைவினை யாலே முழுகுகிறார் — பன்னெடுநாள்
துன்பக் கடலதனில் தூயவர்க ளாவதென்றோ
இன்பப் பெருமா னிசை.

6. கட்டளைக் கலித்துறை

இன்பப் பெருமா னிரங்கியே வந்தெமை யாண்டருள்வாய்
அன்பர்க் கிரங்குவாய் ஆறுதல் செய்குவா யென்றணைந்தே
நின்பக்கல் வந்து நிதமும் தொழுது நினதடியர்
என்றொக்கல் கூற இயைந்தோ மிறைவா இனியவனே.

7. வெண்பா

இனியவனே ஈசனுக்கும் எய்தியதோர் நாதா
கனியதனைப் பெற்றிடுதல் வேண்டி — அணியுடைய
நீலமயி லேறி நிகரிலா வேகமொடு
ஞாலமெலாம் சுற்றியசீ லா.

8. கட்டளைக் கலித்துறை

ஞாலந் தணில்வாழ் நரரெலா முன்னடி நாடியின்று
ஓல மிடுவது முன்செவி தன்னிலே உற்றிலதோ
காலன் விடும்பல தூத ரெனவே கடுகிவந்து
பாலர் விருத்த ரெனவே யெணாது பருகுவரே.

9. வெண்பா

பருகுவரே ஆருயிரைப் பார்தனிலே இன்று
உருகுவதும் தானறியார் ஊமர் — தருமமதைச்
சற்றுமே பாரார் தமிழர் படுதுயரை
உற்றுமே ஓரார் உரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. கட்டளைக் கலித்துறை

உற்றுமே ஓர்ந்திட உன்னடி தன்னையே நம்பியிங்கு
சுற்றமாய் வந்தனம் சூழ்ந்துமே நொந்தனம் தூயவனே
பற்பல தொல்லைகள் பண்ணிய சூரனைப் பார்புகழ
விற்றிறங் காட்டி வியப்புடன் ஆட்கொண் டருளினையே.

11. வெண்பா

வியப்புடனே ஆண்டனையால் விண்ணவரும் மண்ணும்
நயப்புடனே போற்றினரே நன்கு — பயத்துடனே
குற்றேவல் செய்து குறுகியன்று வாழமரர்
நற்றவத்தால் நன்மைபெற்றா ரே.

12. கட்டளைக் கலித்துறை

நற்றவம் செய்ததால் நன்மையடைந்தவர் நானிலத்தில்
பற்பல ரென்று பகர்ந்திடும் பண்டைய நூல்களெலாம்
சற்றுமே உன்னடி சார்ந்திடல் போற்றிடல் செய்தலின்றிக்
கற்றை யிருளென வந்திடு மின்னலாற் காய்குவரே.

13. வெண்பா

காய்ந்திடுவர் சோகமதாற் கண்ணீர் உகுத்திடுவர்
பாய்ந்துவரு நீத்தமெனப் பன்னாளும் — ஏய்ந்துவரும்
இன்னல் களையெண்ணி ஏங்கிக் கலங்கிடுவர்
மன்னா எமையாள வா.

14. கட்டளைக் கலித்துறை

மன்னா கடப்ப மலரணி மார்பசீர் மால்மருகா
பன்னா ளிவணாம் படுதுயர் காண்கிலை யோமுருகா
இந்நா ளெமைக்காத் திடவரு வாரோ எவருமிலர்
உன்னாம மோத ஒழித்திடு வீரெங்கள் ஓடுதலே.

15. வெண்பா

ஒழித்திடுவீ ரோடுதலை ஓய்வதனைத் தந்து
பழித்திடவே வாழும் பயஞ்சேர் — இழிப்புடைய
வாழ்க்கை தனையொழித்து வையமதி லுன்னதமாம்
வாழ்க்கை தனையடைய வை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. கட்டளைக் கலித்துறை

வைத்திடு நன்னிலை தன்னிலே வாழ்ந்து வருத்தமுறும்
புத்திர ராகிய போதம் நிறைதமிழ் மக்களெமை
இத்தரை தன்னிலே எம்மிடர் தீர்ப்பா ரெவருமிலர்
பத்தியாய்ப் பாடினோம் பார்த்தருள் செய்வீர் பரஞ்சுடரே.

17. வெண்பா

பரஞ்சுடரே பார்வதியின் பாலகனே சூரன்
உரங்கிழிய எய்த ஒளிசேர் — கரம்பொருந்தும்
நற்படையாய் ஞான நறும்படையாய் நாடிவந்தோம்
அற்புதனே ஆண்டருள்வா யே.

18. கட்டளைக் கலித்துறை

ஆண்டருள் வாயென அண்டினோ முன்னடி ஆறுதல்செய்
பூண்டருள் கொண்ட புனித புதல்வராம் நாமினியே
காண்டலும் செய்யோம் கருதோ மெவரையும் காசினியில்
மாண்டே யொழியினும் நாமற வேமுன் னடியிணையே.

19. வெண்பா

அடியிணையே தஞ்சமன்றி ஆம்வழிவே றில்லை
படியினிலே நாங்களுறும் பாடு — முடிவதெப்போ
வள்ளி மணவாளா வானவரைக் காத்ததுபோல்
துள்ளி வருவாய் துணை.

20. கட்டளைக் கலித்துறை

துள்ளியே வந்திடு தோமறக் காத்திடு சூரனன்னார்
எள்ளியே செய்திடு மேதங்கள் போக்கிடு வாயிறைவா
கள்ளமில் லன்பொடு காதலம் நாமுன் அடியிணைகள்
உள்ளியே ஓடி உறுமிடம் சேரா ரிணுவையதே.

திருவிரட்டை மணிமாலை முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org